உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவம்

மலர் 2.] | இராக்ஷச௵ மாசிமீ 1916௵ பிப்ரவரிமீ | [இதழ் 2.

" தனமா வதுதிரு நாவுக் கரசின் சரண மென்றே
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்டமிழ்க்கே
யினமாத் தனது பெயரிடப் பெற்றவ னெங்கள்பிரா
னனமார் வயற்றிங்க ளூரினில் வேதிய னப்பூதியே."

அப்பூதியடிகணாயனர் புராணம்.*

சோழநாட்டிலே, தேவாரம்பெற்ற தலங்களுள் ஒன்றாகிய திருப்பழனத்திற்குச் சமீபத்திலே, திங்களூர் என்னுந் திருப்பதி யொன்றுளது. அதில், திருநாவுக்கரசு நாயனார் காலத்திலே, அப்பூதி ஐயர் என்னும் சைவப்பிராமணர் ஒருவர் இருந்தனர். அவர் "வேதியர்க்கழகு வேதமும் ஒழுக்கமும்" என்றபடி, களவு பொய் கோபம் காமம் முதலிய தீயகுணங்கள் சிறிதுமின்றி, புண்ணியங்களெல்லாந் திரண்டு ஓர் வடிவெடுத்தாற்போன்றிருந்தனர். அவர் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும், சிக்ஷை, வியாகரணம், சந்தோவிசிதி, நிருத்தம், சோதிடம், கற்பம் என்னும் ஆறு வேதாங்கங்களையும், மீமாஞ்சை, நியாயம், புராணம், மிருதி என்னும் நான்கு உபாங்கங்களையும், காமிகமுதல் வாதுளம் இறுதியாகவுள்ள இருபத்தெட்டு சிவாகமங்களையும் கசடறக் கற்று, ஆகவனீயம் தட்சிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்றக்கினிகளையும் விதிப்படி வளர்த்து, அருந்ததியும் வணங்கும் கற்பிற் சிறந்த மனைவியோடு சகலைசுவரிய சம்பன்னராய் இல்லறம்புரிந்து கொண்டு

* இதில் பெரியபுராணத்தில் இல்லாதன காணப்படின் அவற்றைப் பத்திரிகாசிரியர் வருவித்துரைத்தனவாகக் கொள்க.

வந்தனர். அவர் தாம் பெற்ற பிறவியாலும் செல்வத்தாலும் கற்ற கல்வியாலும் அடையவேண்டிய பயனெல்லாம் பிறர்க்குபகரித்தலும், சிவபத்திசெய்தலும், சிவனடியார்களுக்கு அடிமைத்தொண்டு செய்தலுமே யென்பதை யுணர்ந்து, தமக்கு நேரிடும் பிரயாசைகளை நோக்காமலும், பிரதிபலனை யெதிர்பாராமலும், பிறவுயிர்களுக்கு நேரிடுந் துன்பங்களைத் தமக்கு நேர்ந்தனவாகவெண்ணி யகற்றுவார். தமது ஜனனவிடாய் தீர்ப்பார்போன்று தண்ணீர்ப்பந்தர் வைத்து; சிவதலயாத்திரை செய்வோர்க்கும் பிரயாணிகளுக்கும் குளிர்ந்த நீர் மோர் முதலியன கொடுத்து, தாகவிடாய் தீர்ப்பர். தமது பிறவிப் பிணியகற்றுவார்போல் சத்திரங்கட்டி ஏழைகளுக்கு அன்னமளித்துப் பசிப்பிணியகற்றுவர். மடங்கள் அமைத்துச் சைவசமயபரிபாலனஞ் செய்விப்பர். திருநந்தனவனங்கள் வைத்துச் சிவாலயங்களுக்கு நால்வகைப்பூக்களுங் கொடுப்பர். இன்னும் பற்பல தருமங்களைச் செய்வர். சிவனடியார்களைக் கண்டமாத்திரத்தில், அவர்கள் எந்நிலையிலிருந்தாலும், எக்குலத்திலிருந்தாலும், எவ்வொழுக்கத்தினராயினும், அவைகளை நோக்காமல், தம்முடைய உயர்குலம் கல்வி செல்வம் முதலியவற்றையெல்லாம் முற்றிலும் மறந்து, அவர்களைச் சிவபெருமானுகவே மதித்து வழிபடுவர். சிவபத்தியில்லாதவர்கள் எவ்வளவு உயர்குலத்தினராயினும் சகல கலைகளையுங் கற்றவராயினும் அவர்களைக் காணக்கூசுவர். அவர்களோடு பேச அருவருப்பர்.

அவர் திருநாவுக்கரசு நாயனுரைத் திருவதிகை வீரட்டானேசுவரர் சூலைநோயினுல் தடுத்தாண்டருளியதையும், அவரைச் சமணர்கள் சுண்ணும்புகாளவா யெனப்படும் நீற்றறையில் தள்ளி ஏழுநாள் வரையில் கொளுத்தியும், எட்டாம்நாளில் அவர்கள் அவ்வறையைத் திறந்துபார்க்க அவர் திருமேனி சிறிதும் வாடாமல் பஸ்மோத்தூளித விக்கிரகமாய், உருத்திராக்கமாலாபரணம் விளங்க, சிவபிரான் திருவடிகளிற் பதிந்த மனமும், உள்ளிருந்த அன்பு கசிந்துருகிப் பாய்வதுபோல் ஆனந்தவருவிசொரிகின்ற கண்ணும், மொழிக்குமொழி தித்திக்கத் தமிழ்வேதம்பாடும் செவ்வாயுமாக வெளிவந்தமையையும், அச்சமணர்கள் விஷங் கலந்துகொடுத்தசோற்றை யமுதமாக வுண்டருளியதையும், அவர்கள் அவரைக் கொலைசெய்ய ஏவிய மதயானை அவரை வலம்வந்து வணங்கி ஏவினவர்களைக் கொன்றமையையும், அவர்கள் அவரை ஒரு கல்தூணில் நன்ரு யிறுகக்கட்டி நடுக்கடலில் கொண்டுபோய் தள்ளிவிட அக்கற்றூணேயே தெப்பமாகக்

கொண்டு கரையேறியதையும், பின்னும் தமிழ்வேதம்பாடி அள விறந்த அற்புதங்களைச் செய்து சைவசமயமே சமயமென்பதை விளக் கியருளுவதையும் கேட்டு, அவர்பால் அளவுபடாத அன்புவைத்து, அவரைத் தரிசிக்குமுன்னமே அவரைத் தமது குலதெய்வமாக மதித்து ஒழுகுவாராயினர். திருநாவுக்கரசு என்னும் திருநாமமே அவர் உச்சரிக்கும் மந்திரமாயிருந்தது. அவர் சிந்தனையெல்லாம் திருநாவுக்கரசு நாயனர் சிந்தனையாகவே யிருந்தது. அவர் உடல் பொருளாவி யாவும் திருநாவுக்கரசு நாயனர் உடைமைகள் என்று அவருக்கே அர்ப்பணஞ் செய்வாராய் அவர் வைத்திருந்த தண்ணீர்ப் பந்தருக்குத் திருநாவுக்கரசு நாயனர் தண்ணீர்ப்பந்தர் என்று பெய ரிட்டனர். தன் பிள்ளைகளுக்கும் மூத்த திருநாவுக்கரசு எனவும் இளைய திருநாவுக்கரசு எனவும் பெயரிட்டனர். இம்மட்டோ, தம் மிடத்திருந்த அசையும்பொருள் அசையாப்பொருள் ஒவ்வொன்றுக் கும் திருநாவுக்கரசு நாயனர் திருப்பேரைச் சேர்த்துப் பெயரிட் டனர்.

அவர் இவ்வாறு திருநாவுக்கரசு நாயனரைப் பூசிப்பதுமாத்திர மன்றி, அளவுகடந்த சிவபத்தியினுல் சிவசின்னங்கள் தரித்தவர்களை யெல்லாம் சாதி வித்தியாசம் பாராட்டாமல் சிவபெருமானே தம்மை யாட்கொள்ளச் சகளீகரித் தெழுந்தருளினர் என்று பூசிப்பதைக் கண்ட அவருறவினர் சிலர் அவரைவெறுத்து இகழ்வாராயினர். அவர் களுட்சிலர் "இவர் அதிகமாகப் படித்துப் பித்தேறினவர்" என்றார் கள். சிலர் "இவன் இழிகுலத்தினரையெல்லாம் சிவனடியார்கள் என்று சொல்லிக்கொண்டு அவர்களோடு உறவாடுகிறான். இவனுறவு நமக்குத் தகாது" என்றார்கள். சிலர் அவரைப்பார்த்து "ஐயா, அப்பூதி ஐயரே, நீர் உயர்ந்த பிராமண குலத்திற்பிறந்து சகல கலை களையும் ஓதியுணர்ந்தும் பூசுரர்களாகிய பிராமணர்களைமாத்திரம் பூசிப்பதைவிட்டு, சாம்பலைப் பூசித்திரியும் கண்டவர்களையெல்லாம் தெய்வமாகப் பூசித்துக் கொண்டாடிக் கூத்தாடுகிறீர்; இதென்ன விபரீதம்?" என்பார்கள். அவ்வாறு கூறுவோர்களை நோக்கி, அப்பூதி யடிகளுயனர், வேதியர்களே, நால்வகை வருணத்தாருள்ளும், பிரா மணர்கள் உயர்ந்தவர்கள் என்பது உண்மையே; ஆனல், சிவனடியார் கள் பிராமணர்களைக்காட்டிலும் மிக்குயர்ந்தவர்கள். பிராமணர்களால் மாத்திரமன்றி அரிபிரமாதி தேவர்களாலும் வேதங்களாலும் வணங் கப்படும் மகா தேவராகிய சிவபெருமானே தொண்டருள்ளத்தடக்கம் என்றால் சிவனடியார்கள் பிராமணர்களாலும் தேவர்களாலும் வணங்

குதற்குரிய பரதெய்வங்களென்பதைச் சொல்லவும்வேண்டுமோ? நமது குலதெய்வமாகிய திருநாவுக்கரசு நாயனார்,

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோ
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெல்லாங் குறைந்தழுகு தொழு நோயரா
யாவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகி
லவர்கண்டீர் நாம்வணங்குங் கடவு ளாரே.

என்றருளிச்செய்ததையும், திருமூல நாயனார்,

வித்தக மாகிய வேடத்த ருண்டவூண்
அத்த னயன்மா லருந்திய வண்ணமாம்
சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே.

என்று அருளிச்செய்ததையும் நீங்கள் கேட்டதில்லையா? சிவனடியார்களைப் பூசிக்காத ஜன்மம் ஒரு ஜன்மமா? அவர்களிடத்தில் அன்பில்லாத சிந்தையே யிரும்பு. அவர்களுக்குத் தொண்டுபூண்டொழுகாத சரீரமே மரம். அவர்களை யன்போடு காணாத கண்ணெல்லாம் காணாத கண்களே. அவர்கள் புகழைக்கேட்டு ஆனந்திக்காத செவியெல்லாம் கேளாச்செவிகளே. ஆதலால், நீங்களும் உய்ய வேண்டுமாயின் என்னுடன் கூடிச் சிவனடியாரைப் பூசியுங்கள்" என்பார். இவ்வாறு நாயனார் கூறியருளுவதை மற்ற வேதியர்கள் கேட்டு "ஐயா, அப்பூதியாரே, நீர் சொல்வது வெகு அழகாயிருக்கிறது. நமது சிறந்த தெய்வபாஷையாகிய கீர்வாணத்தில் ஒப்பற்ற வேதமுதலிய ஓத்துக்களிருக்கவும் அவைகளை யெல்லாம் ஒதுக்கிவிட்டு, சூத்திரபாஷையாகிய தமிழிலிருக்கும் பண்டாரப்பாட்டுகளைச் சொல்லி எங்களுக்குப் புத்திபுகட்டுகிறீர். உம்முடைய செய்கை வெகு நன்றாயிருக்கிறது! பிராமணன் சூத்திரனை வணங்கும்படி எந்த வேதத்தில் சொல்லியிருக்கிறது? எடுத்துக்காட்டும், பார்ப்போம்" என்பார்கள். நாயனார் அவர்கள் அவ்வாறு கூறுவதைக் கேட்டு மனம்பதைத்து, "மறையவர்களே, இவ்வளவுதானா உங்கள் கல்வியறிவு? ஆரியம் தேவபாஷையும் தமிழ் சூத்திரபாஷையுமா? ஆரியவேதம் தெய்வவாக்கும் தமிழ்வேதம் பண்டாரப் பாட்டுமோ? உலகமாகிய புருடனுக்கு இப்பாரதகண்டம் முகமாகும். இப்பாரத

கண்டத்திலுள்ள ஆரியமும் தமிழும் ஆகிய இரண்டும் இரண்டு கண்களாகும். இவ்விரண்டு கண்களுள் நாம் இப்போது வழங்கி வருவதும் பிரத்தியட்சமாய் நமக்குப் பயன்பட்டு வருவதும் தமிழ்க் கண்ணேயாம். அல்லாமலும், இவ்விருமொழிகளுக்கும் முதற்குரவராவார் சிவபெருமானே. அவரே வடமொழியிலக்கணத்தைப் பாணினி முனிவருக்கும், தென்மொழி யிலக்கணத்தை அகத்திய முனிவருக்கும் உபதேசித்ததுமன்றி, தாமும் ஓர் சங்கப்புலவரா யிருந்து தமிழை வளர்த்தார் என்றால் தமிழின் பெருமையையாவர் அளவிட்டுரைக்கவல்லார்! தமிழ்மறையைப் பண்டாரப்பாட்டென்று இழித்துக் கூறுகிறீர்கள். ஐயோ, உங்கள் அறிவீனத்தையென் னென்று சொல்வேன். அந்தப் பண்டாரப்பாட்டே யில்லாவிட்டால் இதுவரையில் நாமெல்லோரும் சமணர்களாய் விட்டிருப்போமே; அப்பண்டாரப்பாட்டுகளாலல்லவா நாம் இப்போது பிராமணர்களா யிருக்கிறோம்; நம்முடைய வைதிகவொழுக்கங்கள் நிலைத்தன. அப்பண்டாரப்பாட்டுகளுக்காகவல்லவா சிவபெருமான் தலையில் மண் சுமந்ததும், முதுகில் புண்சுமந்ததும். கடலில் கருங்கல்லை மிதக்கச் செய்தது எந்தப்பாட்டு? வேதங்கள் சொல்லத் தடுமாறும் சுட்டுணர் விறந்த சிவபெருமானைச் சிறுவிரலாற் சுட்டிக்காட்டியது எந்தப் பாட்டு? சொல்லும் பார்ப்போம். சிவஞானச்செல்வர்களாகிய சிவனடியார்களைப் பண்டாரங்களென்றும் அவர்கள் திருமேனியில் தரித்திருக்கும் திருவெண்ணீற்றைச்சாம்பலென்றும் இழித்துக்கூறிப் பாவஞ் சுமக்கின்றீர்கள். சர்வபண்டங்களும் நிறைந்த பொக்கிஷம் பண்டாரம் என்று சொல்லப்படும். சகலகலைகளையும் உணர்ந்து உலகுக்குச் சிவஞான பொக்கிஷமாயிருக்கும் சிவனடியார்களுக்குப் பண்டாரங் கள் என்று பேர். சிவபெருமான் எப்படி ஆரியவேதத்தை யருளிச் செய்தனரோ அப்படியே, சிவலிங்க முதலிய திருமேனிகளை யதிட்டித்து அவர் உயிர்களுக்கு அநுக்கிரகஞ் செய்வதுபோல், முன்னே நமது பரமாசாரியராகிய மாணிக்கவாசக சுவாமிகளை யதிட்டித்துத் திருவாசகமாகிய தமிழ்வேதத்தை யருளிச்செய்ததுமன்றி, இப் போது நமது குலதெய்வமாகிய திருநாவுக்கரசு நாயனரையும் திருஞானசம்பந்த சுவாமிகளையும் அதிட்டித்துத் தேவாரமாகிய தமிழ் வேதம் அருளிச்செய்யாநிற்கின்றனர். நான்வணங்கும் சிவனடியார் களின் திருமேனியிலுள்ள திருவெண்ணீற்றைச் சாம்பல் என்று சொல்லி ஏளனஞ்செய்கிறீர்கள். சிவபெருமான் திருமேனியில் தரித் திருப்பதும் இச்சாம்பலே. இதனைத் தமிழ்வேதம் "சாம்பலகலத்

தான் சார்பல்லாற் சார்பிலமே" என்றருளிச்செய்ததனுல் உணரலாகும். இந்தச்சாம்பலே விபூதி எனவும் நீறு எனவும் பற்பம் எனவும் பசிதம் எனவும் சாரம் எனவும் இரக்ஷை யெனவும் சொல்லப்படும். மனிதர்களும் தேவர்களும் பெறற்பாலனவாகிய ஐசுவரியங்க ளெல்லாவற்றுள்ளும் மேலான ஐசுவரியமாயிருத்தலால் இது விபூதி யென்னப்பட்டது. எல்லாவற்றையும் பரித்தியாகம்பண்ணின முமுட்சுக்களும் இவ்விபூதியைப் பெருஞ்செல்வமெனப் போற்றி வாழ்வார்கள். அணிந்தவர்களுடைய பாவங்களை நீறுசெய்வதனுல் நீறு எனவும், அறியாமையை நீக்கிச் சிவஞானத்தைத் தருதலாற் பசிதம் எனவும், உயிர்களின் மலத்தைப் போக்குவதனுல் சாரம் எனவும், ஆன்மாக்களை இரட்சித்தலால் இரட்சை யெனவும் சொல்லப்படுவதும் இச்சாம்பலே. இதையெடுத்துப் போற்ருத உபநிடதமில்லை. இதைப் புகழாத மிருதியில்லை. இதைத் தோத்திரஞ்செய்யாத புராண மில்லை. இதை யணியாததேவர்களில்லை. பிருகஜ்ஜாபாலோபநிடதமானது பஸ்மதாரணஞ்செய்வதினுலேயே ஒருவனுக்கு மோக்ஷ முண்டாகிறது. சிவசாயுச்சிய முண்டாகின்றது. அவன் மீளத் திரும்புகிறதில்லை என்னும் பொருள்தோன்ற 'பஸ்ம தாரணு தேவ முக்திர்பவதி சிவசாயுஜ்யமவாப்நோதி நஸபுநரா வர்த்ததே, நஸபுநரா வர்த்ததே" என்று கூறுகின்றது. அன்றியும், எவர்கள் பஸ்மதாரணத்தை விட்டுக் கன்மத்தை யநுட்டிக்கின்ருர்களோ, அவர்களுக்குக் கோடி ஜன்மங்களினும் சம்சாரத்தினின்று விடுபடுதல் உண்டாகாது என்னும் பொருள் தோன்ற "யே பஸ்மதாரணம் த்யக்வா கர்மகுர்வந்தி மாநவாஃ, தேஷாம்நாஸ்தி விநிர்மோக்ஷஸ் ஸம்ஸாராஜ்ஜன்ம கோடிபிஃ" என்றும், பஸ்மமில்லாத நெற்றியைச் சுடு, சிவாலயமில்லாத கிராமத்தைக் கொளுத்து, சிவார்ச்சனைசெய்யாத பிறவியைத் தகித்துவிடு, சிவசம்பந்தமில்லாத வித்தையை எரித்துவிடு என்னும் பொருள்தோன்ற "திக்பஸ்மரஹிதம்பாலம், திக்க்ராமமசிவாலயம், திக்கனீசார்ச்சனு ஜன்மம், திக்வித்யாமசிவாத்மிகாம்" என்றும் அருளிச்செய்தது. பிராமணனேனும் க்ஷத்திரியனேனும் வைசியனேனும் சூத்திரனேனும் சரீரமெங்கும் விபூதியைத் தரிப்பானுயின் அவன் சரீரத்தில் எவ்வளவு ரோமகூபங்களுண்டோ அவ்வளவும் இலிங்கங்களாம் என்று ஜாபலங் கூறுகின்றது. சண்டாளனுயிருப்பினும் சிவனெனுமொழியைச் செப்புவானுயின், அவனேடு பேசுக, அவனேடு வசிக்க, அவனேடு உண்க என்று முண்டகோபநிடதம் கூறுகின்றது. இவ்வாறு ஆரியவேதம் கூறியதையே தமிழ்வேதமும்,

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
யுவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
யிவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

என்றருளிச்செய்தது. இதனால் ஆரியவேதமே தமிழ்வேதம் என்பதும் சிவனடியார்களியாவராயிருந்தாலும் பிராமணர்முதல் எல்லாவருணத்தாரும் வணங்குதற்குரியார் என்பதும் விளங்கும்" என்பார்.

அவர் இவ்வாறு ஒழுகுநாளில், திருத்தலங்கடோறும் எழுந்தருளித் தேவாரத் திருப்பதிகங்கள் பாடி இறைவனை வணங்கிச் சென்ற திருநாவுக்கரசு நாயனார், திருப்பழனத்தைத் தரிசித்துக் கொண்டு போம்போது திங்களூரை யடுத்தமார்க்கமாய்ச் சென்றார். அது இடைவிடாமல் பிரயாணிகள் பல வூர்களுக்குப்போகும் மார்க்கமாயிருந்தது. அதில் ஒரு தண்ணீர்ப்பந்தர் மிகவும் விசாலமாய், சிறு தென்றல் வீசுவதாய், எத்தனைபேர்வந்தாலும் நிழல் கொடுக்கக்கூடியதாய், சிவகாருண்ணியமுடையவர்கள் மனம்போலவும் நீர்நிறைந்த தடாகம்போலவும் குளிர்ந்து,நீர்மோர்முதலியனநிறைந்து,பொலிவுபெற்றிருக்கக் கண்டு, அவ்வாறு அப்பந்தரை யமைத்தவரின் கருணையை வியந்து, அதனை யணைதலும், அதில் எங்குபார்த்தாலும் மிகவும் அழகாய்

திருநாவுக்கரசு நாயனார் தண்ணீர்ப்பந்தர்

என்று எழுதி யிருந்ததைப்பார்த்துப் பின்னும் அதிசயமடைந்து, அங்கிருந்தவர்களைப்பார்த்து " இப்பெயரையிட்டு இவ்விடத்தில் இத்தண்ணீர்ப்பந்தர் வைத்தவர் யாவர் ?" என்று வினவினார். அவர்கள், " சுவாமீ, யாரோ வொருபெரியவர் திருவதிகையில் வீரட்டானேசுவரரால் தடுத்தாளப்பெற்று, திருநாவுக்கரசு என்று பெயரிடப் பெற்றனராம். அவர்பெயரால் அப்பூதியைய ரவர்கள் இப்பந்தரைமாத்திரமன்றி, மடங்கள் நந்தனவனங்கள் அறச்சாலைகள் முதலியனவும் அமைத்துள்ளார்கள்" என்றார்கள். அதைக்கேட்டு வாகீசமுனிவர் பின்னும் ஆச்சரியமடைந்து அவரைக்காண விரும்பி " அவர் எங்குள்ளவர் " என்று கேட்க, அவர்கள் " அம்மறையவர் இவ்வூரினுள்ளவரே. இதுவரையில் இங்கிருந்து இப்போதுதான் வீட்டுக்குப் போனார். அவர்வீடும் தூரத்திலில்லை. சமீபத்திலுள்ளது" என்

றூர்கள். அதைக்கேட்டு வாகீசமுனிவர் விரைந்துபோய் அப்பூதியடிகளாரின் திருமாளிகைத் தலைவாயிலை யடைதலும், அவர் யாரோ ஒரு சிவனடியார் எழுந்தருளினார் என்று கேள்வியுற்று விரைந்து சென்று வாகீசப்பெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். அவர் பணிவதற்குமுன் வாகீசமுனிவரும் அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். அப்பூதியடிகளுபனார் வாகீசப்பெருமானாருடைய சிவவேடப்பொலிவையும் கருணைபொழி விழியையுங்கண்டு மனமுருகி "என்னையாளும் கிருபாசமுத்திரமே, தேவரீர் இவ்விடம் எழுந்தருள யான் எத்தவஞ் செய்தேன்" என்றனர். வாகீசமுனிவர் "ஐயரே, அடியேன் திருப்பழனஞ்சென்று இறைவனாரை வணங்கிச் செல்லும்போது வழியெங்கும் தாங்கள் வைத்திருக்கும் தண்ணீர்ப் பந்தர், அறச்சாலைகள், மடங்கள், நந்தனவனங்கள், வெட்டிவைத்திருக்கும் குளங்கள், கட்டிவைத்திருக்குங் கிணறுகள், முதலியவைகளைக்கண்டு சந்தோஷங்கொண்டு இத்தகைய பதிபுண்ணியங்களைச் செய்துகொண்டிருக்கும் தங்களைத் தரிசிக்க விரும்பிவந்தேன். தாங்கள் சிவனடியார்கள்பொருட்டு வைத்திருக்கும் குறைவற்ற அரிய பெரியதண்ணீர்ப்பந்தலில் தங்கள்பெயரை யெழுதாமல் ஏன் வேறொருவருடைய பெயரை யெழுதினீர்கள் ?" என்றார். இதைக் கேட்டமாத்திரத்தில், அப்பூதியடிகளுபனாருக்கு மனம் கலங்கிவிட்டது. கண்கள் நீர் ததும்பின. விம்மிவிம்மி அழத்தொடங்கினார். திருநாவுக்கரசு நாயனாரிடம் அதிக கோபங்கொண்டு, அவர்முகத்தைப் பார்த்துப் பேசவும் மனமில்லாமல், உரைதடுமாற, ஐயா, நல்லவார்த்தை சொன்னீர் ! நல்லவார்த்தை சொன்னீர் ! சமணப் பாவிமக்களோடு கூடி பல்லவராஜன் செய்த கொடுமைகளையெல்லாம் சிவத்தொண்டின் சிறப்பால் வென்றருளிய எங்கள் குலதெய்வத்தின் திருப்பெயரா வேறொருவர் பெயர் ?. சர்வான்மாக்களையும் அடிமைகளாகவுடைய எமது சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளிடத்தில் நீங்காத அன்புடையவர்களுக்கு முத்திகாலத்திலன்றி பெத்தகாலத்திலும் இன்பமேயுண்டாகுமென்பதைக் கடையேனுகிய என்போல்வாருந் தெளிந் துய்யும்பொருட்டு, இறைபணியின் மகிமைகளை உலகமுய்ய விளக்கிக்கொண்டிருக்கும் திருநாவுக்கரசர் திருப்பெயரை யான் எழுதியிருக்க, நான் உம்மிடத்தில் எதிர்பாராத கொடுஞ்சொற்களை மொழிந்தீர். அவர் தம்மைச் சமணர்கள் கற்றூணில் கட்டிக் கடலில் தள்ளிவிட அதையே தெப்பமாகக்கொண்டு கரையேறியதை உலகடங்கலு மறியுமே. இது மரம் கொடி செடிகளுக்கும் தெரியுமே. நீர்

யாரையா ?; சைவப்பழம்போ லிருந்துகொண்டு இவ்வாறு பேசுகிறீர். நீர் உறைவது எவ்விடம் ?" என்றனர். திருநாவுக்கரசுநாயனார் அவருடைய அளவுபடாத அன்பையும் பெருமையையும் வியந்து, " அவ்வாறு அருளுருவாயமைந்த சூலைநோயால் தடுத்தாண்டருளப்பெற்று, பிறசமயத்துறையினின்றுங் கரையேறி, சைவத்துறையடைந்து உய்ந்தவன் அறிவு ஒரு சிறிதுமில்லாச் சிறியவனாகிய யானே" என்று கூறி, தம்மை யவர் அறியும்படி தம்முடைய சரித்திரத்தைக் கூறியருளினார். அதைக் கேட்டவுடனே, அப்பூதியடிகணாயனார் மெய்ம் மறந்து, கைகள் சிரசின்மேலேறிக் குவியவும், கண்கள் ஆனந்தவருவி சொரியவும், உரை தடுமாறவும், உடம்புமுழுதும் மயிர்க்கூச்சுண்டாகவும், நிலத்தில் விழுந்து அவருடைய திருவடித்தாமரைகளைத் தமது சிரசிற் சூடிக்கொண்டார். உடனே வாகீசமுனிவரும் அப்பூதியடிகளுடைய திருவடிகளில் வீழ்ந்து பணிந்தனர். இவ்வாறு இவர்களிருவரும் ஒருவரையொருவர் வீழ்ந்து பணிந்தபோது இவர்களுள்ளமிருந்த நிலையை அந்நிலையில்நின்றுணர்வதன்றி எவ்வாறு சொற்களால் விளக்கலாம்!. வாகீசமுனிவர் தமது திருவடியில் மெய்ம் மறந்து வீழ்ந்துகிடந்த அப்பூதியடிகளாரை இருகரங்களாலும் எடுத்தருள, அவர் எழுந்து ஆனந்தக் கூத்தாடி, தோத்திரங்கள் பாடி, இன்னது செய்வதென்று தெரியாமல், திருமாளிகையின் உள்ளே சென்று தமது மனைவி மக்களையும் சுற்றத்தாரையும் அழைத்துச் சென்று வணங்குவித்து, வாகீசமுனிவரை உள்ளே எழுந்தருளுவித்து, அவர் திருவடிகளை மலரிட்டுவைத்த பாத்தியநீரால் விளக்கி, அந்நீரைத் தங்கள் சிரசின்மேல் தெளித்துக்கொண்டு உள்ளும் பருகி உள்ளங் குளிர்ந்தார்கள். பிறகு, அவரை பீடத்தில் எழுந்தருளுவித்து, மலர்களால் அருச்சித்து, நறுமணம்வீசும் திருநீற்றுமடக்கை அவர் திருமுன்னே காட்டி, திருவமுது செய்தருளும்படிப் பிரார்த்திக்க அதற்கு வாகீசமுனிவர்உடன்பட்டருளினர்.

(இன்னும் வரும்.)

சமயம்.

11 - ம் பக்கத் தொடர்ச்சி.

இதுவரையில் உலகத்தில் எப்படி இத்தனை சமயங்களுண்டாயின வென்பதை விளக்கினோம். இனி இச்சமயங்களியாவும் தம்முள் சமத்துவமுடையனவா, அன்றி ஏற்றத்தாழ்வுகளுடையனவா என்பதை விளக்குவாம்.

உலகத்தில் கல்வியறிவு எல்லோர்க்கும் பொதுவாயிருந்தாலும், கல்வியறிவு உடையவர்களெல்லாம் ஒரேயளவும் ஒரேவகையுமான கல்வியறி வுடையவர்களாயில்லை. ஒரேயளவும் ஒரேவகையுமான அனுபவ வுணர்ச்சி யுடையவர்களாகவுமில்லை. ஒருவரினொருவர் வெவ்வேறு அளவினவும் வெவ்வேறு வகைப்பட்டனவுமான கல்வியறிவும் அனுபவவுணர்ச்சியு முடையவர்களாயிருக்கிறார்கள். முற்று முணர்ந்தவரில்லை. ஆதலால், மனிதர்கள் தங்கள் அறிவையும் அனுபவத்தையுங்கொண்டு நிறுவிய சமயங்களியாவும் அவைகளை நிறுவினவர்களின் அறிவனுபவங்கட்கேற்ப ஒன்றினொன்று உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்கும். இதுபற்றியே மதங்கள் பலவும் புறப்புறச்சமயங்களெனவும், புறச்சமயங்களெனவும், அகப்புறச்சமயங்களெனவும், அகச்சமயங்களெனவும் வகுக்கப்பட்டன.

அன்றியும், "ஈசாநஸ் ஸர்வவித்யாநாம்" என்னும் வேதவசனத்தின்படி, எல்லாவித்தைகளுஞ் சேர்ந்து கடவுளின் சொரூபமாகும். ஆதலால் எல்லாவித்தைகளையும் ஒருங்குணர்ந்தவர்கள் இருந்தால் அவர்களே கடவுளை யுணர்ந்தவராவார்கள். அவர்கள் நிறுவிய சமயமே உண்மைச் சமயமாகும். கடவுள் ஒருவரே முற்று முணர்ந்தவர். ஆதலால், கடவுளாலருளிச்செய்யப்பட்ட நூல்களும் சமயமும் எவையோ, அவையே உண்மை நூல்களும் உண்மைச் சமயமுமாகும். அச்சமயநூல்களே வேதசிவாகமங்களும் அச்சமயமே சைவசமயமுமாம். மற்ற நூல்களெல்லாம் சீவர்களால் பசு ஞானத்தைக்கொண்டு செய்யப்பட்டவழி நூல்களும், சார்புநூல்களும், பூர்வபக்கநூல்களுமாம்.

சிவஞானசித்தியார்.

வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க
ளாதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலா
நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ
றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்.

(இ-ள்.) வேதம் சிவாகமம் என்னும் இரண்டே அநாதிமல முத்தராகிய முழுமுதற்கடவுளால் அருளிச்செய்யப்பட்ட முதனூல்களாம். இவைகளுக்கு வேறாய் தேவர்களாலும் இருடியர்களாலும் சொல்லப்பட்ட நூல்களெல்லாம் வழிநூல்களும், சார்புநூல்களும்,

பூர்வபக்கநூல்களுமாம். வேதம் சிவாகமம் என்னு மிரண்டினுள், வேதமானது உலகத்தாருய்தற்பொருட்டு, ஆன்மாக்களின் பல வகைப்பட்ட பக்குவங்களுக்கேற்ப, பொருள் பலபடத்தோன்றும் சூத்திரம்போலவும், ஆகமமானது சத்திநிபாதமுடைய உத்தமபரி பாகிகளுப் தற்பொருட்டு, அச்சூத்திரப்பொருளைத் தெளிவாயுரைக் கும் பாடியம்போலவும் அருளிச்செய்யப்பட்டனவாம். ஆதலால் வேதம் பொது நூல் எனவும், சிவாகமம் சிறப்பு நூல் எனவுஞ் சொல் லப்படும். அணுதியாயுள்ளவேதத்தில் விளங்கக் கூறப்படாதனவும் வேதத்திற் கூறுங் கருமகாண்டப்பொருள்களுக்கு இன்றியமை யாது வேண்டப்படுவனவுமாயுள்ள பொருள்களையும், வேதமுடிபாய உபநிடதத்தின் சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக் கொண்டு இனிது விளக்குவது சிவாகமமாகலான், இதனின் வேறாய் வேதத்தின் பூர்வபக்கப்பொருள்களைச்சொல்லும் ஏனை நூல்களெல் லாம் பூர்வபக்கநூலெனவும் அதின் சித்தாந்தப்பொருளைச் சொல்லு வதாகிய சிவாகமம் சித்தாந்த நூலெனவுஞ் சொல்லப்படும். எ - று.

வேதமும் சிவாகமும் தம்முள் அபேதமுடைய முதனூல்கள் என்பதனை மற்றொருவியாசமுகத்தால் விளக்குவோம்.

சிவஞானங் கைவரப்பெற்ற ஞானுசிரியர் உத்தமோத்தம பரி பாகமுடைய சீடர்களுக்குத் தாமே நேரில் உபதேசித்து, ஏனையோ ருக்கு அவரவர்களின் பக்குவங்களுக்கேற்பப் பலதிறத்தரான ஆசிரி யர்களைக்கொண்டு உபதேசஞ்செய்விப்பதுபோல், "திருமால் இந்தி ரன்உபமனியன் தபனன் நந்திசெவ்வேளாதி,தருமமுதுகுரவருக்குந் தனதருளாலாசிரியத்தன்மை நல்கி, வருமெவர்க்கும் முதற்குருவாய்" இருக்குஞ் சிவபெருமானுர், தாமே வேதசிவாகமங்களை யருளிச் செய்ததுமன்றி, பலதிறத்தரான ஆசிரியர்களைத் தோற்றுவித்துப் பலவகையான சமயநூல்களைச் சொல்லுவித்தனர். இன்னுஞ் சொல் லுவிக்கின்றனர். ஆதலால் உலகத்திலுள்ள சமயங்கள் பலவும் சைவ சமயத்திற்குச் சோபானங்கள் என்று சொல்லப்படும்.

வேதசிவாகமங்கள் கடவுளாலருளிச் செய்யப்பட்ட முதனூல்க ளென்பது முன்னமே பலபெரியோர்களால் பல பிரபலபிரமாணங் களைக்கொண்டு நிலைநாட்டப்பட்டிருந்தும், அதை யறியாதார் சிலர், அவைகள் மனிதராற் செய்யப்பட்டன வென்று எண்ணி இடர்ப்படு வர். குடிகளைப்பாதுகாக்கும் அரசனுவான் அவர்களுக்கு விதிவிலக் குகளை யறிவிக்கும் நூல்களைக்கூறுதல் எப்படி யவசியமோ, அப் படியே சர்வலோக நாயகராகிய இறைவனும் உயிர்கள் இதாகிதங்

களை யறிந்து தம்மை வழிபட்டு உச்சீவித்தற்கு வேதாகமங்களை யருளிச்செய்தலும் அவசியமாம். அன்றியும், அஞ்ஞானமயமா யிருந்து துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் உயிர்களுக்கிரங்கி, அவை களுக்கு மெய்ஞ்ஞானம் உண்டாகவேண்டியே பஞ்சகிருத்தியங்களைச் செய்துகொண்டிருக்கும் பரங்கருணைத் தடங்கடலாகிய இறைவனார், அவர்கள் பொருட்டு அறிதற்கருவியாகிய வேதாகமங்களை யருளிச் செய்யா தொழிவரோ! சர்வஞ்ஞராகிய அவரே யருளிச்செய்யா விட்டால் அவைகளைச் சொல்லக்கூடிய சர்வஞ்ஞர் வேறுயாருளர்! அவர் செய்யும் பஞ்சகிருத்தியங்களாலியாது பயனுண்டாம்! ஆத லால், வேதாகமங்களைக் கடவுளாலருளிச்செய்யப்பட்ட முதனூல்க ளென்று கொள்வதே அறிவுடையார் கொள்கையாம்.

(இன்னும் வரும்.)

சிவ புண்ணியம்.

சிவபுண்ணியம் பொது வென்றும் சிறப்பு என்றும் இருவகைப் படும். இவற்றுள் பொது வெனப்படுவது சிவபுண்ணியத்திற்கு அங்கமாகிய சிவதீக்ஷையின்றிச் செய்யப்படுவது. சிறப்பாவது சிவ தீக்ஷைபெற்றுச் செய்வது. இவை யொவ்வொன்றும் பத்திகாரண மாக உண்மையாற் செய்யப்படுவதும், புகழ்முதலிய உலகப்பயனை நோக்கிச்செய்யப்படுவதுமென இருவகைப்படும். சிறப்புச் சிவபுண் ணியம் சரியை கிரியை யோகம் ஞானம் என நான்கு வகைப்படும். இவை நான்கும், சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் எனவும், கிரியையிற் சரியை, கிரியை யிற்கிரியை, கிரியையில் யோகம் கிரியையில் ஞானம் எனவும், யோக த்திற் சரியை, யோகத்திற் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் எனவும், ஞானத்திற் சரியை, ஞானத்திற்கிரியை, ஞானத் தில் யோகம், ஞானத்தில் ஞானம் எனவும் பதினாறு வகைப்படும்.

சரியை.

திருக்கோயில் அலகிடல், மெழுகல் முதலியன சரியையிற் சரியை. சந்திரசேகரர் உமாமகேசுரர் முதலிய இருபத்தைந்து மூர்த்திகளையும் விநாயகக்கடவுள் முதலிய பரிவாரமூர்த்திகளையும் பூசித்தல் சரியையிற் கிரியை. நெஞ்சின் கண் உருத்திரக்கடவுளைத் தியானஞ்செய்தல் சரியையில் யோகம். அந்தத்தியானபாவனையின் முதிர்ச்சியால் ஓர் அநுபவவுணர்வு உண்டாதல் சரியையில் ஞானம்.

கிரியை.

சிவபூசைக்கு வேண்டிய உபகரணங்களைச் செய்துகொள்ளுதல் கிரியையிற் சரியை. சிவாகம விதிப்படி ஐவகைச் சுத்தியுடன் சிவ

லிங்கவடிவிற் செய்யும் பூசை கிரியையிற் கிரியை. அகத்தில் பூசை ஓமம் தியானம் ஆகிய மூன்றினுக்கும் இதயம் உந்தி புருவநடு என்னும் மூன்றிடங்களை வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகம் கிரியையில் யோகம். அவ்வந்தரியாக உறைப்பினால் உண்டாகும் அநுபவ வுணர்வு கிரியையில் ஞானம்.

யோகம்.

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரமும் தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்தில் யோகம். சமாதி யோகத்தில் ஞானம். (இதனை இவ்விடத்தில் விரிக்கிற்பெருகுமாதலால் இதின் விரிவு வேறேயொரு வியாசத்தில் விளக்கப்படும்.)

ஞானம்.

ஞான நூல்களை ஞானாசிரியன்பால் கேட்டல் ஞானத்திற் சரியை. அவ்வாறு கேட்ட ஞானப்பொருள்களைச் சிந்தித்தல் ஞானத்திற் கிரியை. அதனைத் தெளிதல் ஞானத்தில் யோகம். ஞானநிட்டைகூடுதல் ஞானத்தில் ஞானம்.

சரியையாதிகளின் பயன்.

உபாயச்சரியையிற் சரியை முதல் உபாய ஞானத்தின் ஞானமீறாகிய பதினாறுவகையினின்றும் பலவேறு வகைப்பட்டு விரியுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன், அவ்வவற்றிற் கேற்ப காலாக்கினியுருத்திரர் முதல் குணதத்துவமத்தகத்திற் சீகண்டபுவனத்தின் கீழுள்ள உருத்திரர்களான அவ்வப்புவனபதிக ளுலகத்தில் சாலோகம் முதலியவற்றைப் பெறுதலாம். உண்மைச்சரியையிற் சரியைமுதல் உண்மை யோகத்தின் ஞானமீறாகிய பன்னிருவகையினின்றும் பலவேறுவகைப்பட்டு விரியுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன், அவ்வவற்றிற்கேற்பச் சீகண்டபுவனமுதல் சுத்தவித்தைக்குக் கீழுள்ள அவ்வப்புவனபதிகளுடைய சிவலோகத்துச் சாலோகம் முதலிய பதமுத்திகளைப் பெறுதலாம். உண்மை ஞானத்திற் சரியைமுதலிய மூவகையினின்றும் பலவேறு வகைப்பட்டு விரியும் சிவபுண்ணியங்கட்கெல்லாம் பயன், அவ்வவற்றிற்கேற்ப சுத்தவித்தைமுதலிய அதிகாரதத்துவம் போகதத்துவங்களில் வைகும் மந்திரர் மந்திரமகேசர் முதலியோர் புவனத்துச் சாலோகமுதலிய அபரமுத்தியைப் பெறுதலாம். பலவேறுவகைப் பட்டுவிரியும் ஞானத்தின் ஞானங்களுள் முடிவாகிய ஞானத்திற்குப் பரமுத்தியே பயன். ஏனையவற்றிற்கு இலயதத்துவத்தில் பலவேறுவகைப்பட்ட அபரமுத்திபயன் எனக்கொள்க.

சிவலிங்க வழிபாடு.

சிவபெருமான், புறத்தே சிவலிங்கமுதலிய திருமேனிகளுங் குருவுஞ்சங்கமமும் ஆதாரமாகக்கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக்கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். ஆதலால், ஆன்மாக்கள் அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம். சிவத்துக்குப் பெயராகிய இலிங்கம் என்னும்பதம், உபசாரத்தால், அச்சிவம் விளங்கப்பெறும் ஆதாரமாகிய சைலமுதலியவற்றிற்கும் வழங்கும். (சைலம் - சிலையாலாகியது.) சிவபெருமான், எங்கும் வியாபகமாய் நிற்பினும், இவ்விடங்களில் மாத்திரமே தயிரில் நெய்போல் விளங்கிநிற்பர்; மற்றை இடங்களிலெல்லாம் பாலில் நெய்போல் வெளிப்படாது நிற்பர்.

சிவலிங்கம், பரார்த்தலிங்கம் எனவும் இட்டலிங்கம் எனவும் இருவகைப்படும்.

பரார்த்தலிங்கமாவது, சிவபெருமான் சங்காரகாலம்வரையுஞ் சாந்நித்தியராய் இருந்து ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கப்பெறும் இலிங்கமாம். இது தாவரலிங்கம் எனவும், திரலிங்கம் எனவும் பெயர்பெறும். (சாந்நித்தியம்—அண்மை, அடுத்தல், வெளிப்படுதல். தாவரம் எனினும், திரம் எனினும், நிலையியற்பொருள் எனினும் பொருந்தும்.)

பரார்த்தலிங்கமாவது, சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம் என ஐவகைப்படும். இவைகளுள்ளே, சுயம்புலிங்கமாவது தானே தோன்றியது. காணலிங்கமாவது விநாயகர் சுப்பிரமணியர் முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டது. தைவிகலிங்கமாவது விஷ்ணுமுதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது. ஆரிடலிங்கமாவது இருடிகளால் தாபிக்கப்பட்டது. அசுரர் இராக்கதர் முதலாயினரால் தாபிக்கப்பட்டதும் அது. மானுடலிங்கமாவது மனிதரால் தாபிக்கப்பட்டது. மானுடலிங்கத்தின் உயர்ந்தது ஆரிடலிங்கம்; அதனின் உயர்ந்தது தைவிகலிங்கம்; அதனின் உயர்ந்தது காணலிங்கம்; அதனின் உயர்ந்தது சுயம்புலிங்கம்.

ஆதிசைவர்களுள்ளே, சமயதீக்ஷை விசேஷதீக்ஷை நிருவாணதீக்ஷை ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றவர்களாய்ச் சைவாகமங்களிலே மகாபாண்டித்தியமுள்ளவர்களே பரார்த்தலிங்கப்பிரதிட்டை, பரார்த்தபூசை, உற்சவம் முதலியவை செய்தற்கு அதிகாரிகளாவர்.

திருக்கோயிலுள்ளிருக்குஞ் சிவலிங்கமுதலிய திருமேனிகள் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்குமார்க்கத்தாலும் வழிபடற்பாலனவாம்; ஆயினும், அவ்வழிபாடு அவரவர் கருத்து

வகையால் வேறுபடும். படவே, அவருக்குச் சிவபெருமான் அருள் செய்யும் முறைமையும் வேறுபடும்.

சரியையாளர்கள் பகுத்தறிவில்லாது சிவலிங்கமுதலிய திருமேனியே சிவமெனக்கண்டு வழிபடுவார்கள். அவர்களுக்குச் சிவபெருமான் அங்கே வெளிப்படாது நின்று அருள் செய்வர்.

கிரியையாளர்கள் அருவப்பொருளாகிய சிவபிரான் ஈசான முதலிய மந்திரங்களினாலே சிவலிங்கமுதலிய திருவுருக்கொண்டார் என்று தெளிந்து, மந்திரநியாசத்தினால் வழிபடுவார்கள்; அவர்களுக்குச் சிவபெருமான், கடைந்தபொழுது தோன்றும் அக்கினி போல, அவ்வம் மந்திரங்களினால் அவ்வவர் விரும்பியவடிவமாய், அவ்வத்திருமேனிகளில் அவ்வப்பொழுது தோன்றிநின்று, அருள் செய்வர்.

யோகிகள் யோகிகளுடைய இருதயமெங்கும் இருக்குஞ் சிவபெருமான் இந்தத் திருமேனியினும் இருந்து பூசைகொண்டருளுவர் என்று தெளிந்து, சாத்தியமந்திரங்களினால் வழிபடுவார்கள். அவர்களுக்குச் சிவபெருமான் கறந்தபொழுது தோன்றும் பால் போல, அவ்வம் மந்திரங்களினால் அவ்வவர் விரும்பிய வடிவமாய், அவ்வத்திருமேனிகளில் அவ்வப்பொழுது தோன்றிநின்று அருள் செய்வர்.

ஞானிகள் மேலே சொல்லப்பட்ட முத்திறத்தாரும்போல் ஓரிடமாகக்குறியாது அன்புமாத்திரத்தால் அங்கே வழிபடுவார்கள்; அவர்களுக்குச் சிவபெருமான், கன்றை நினைத்த தலையீற்றுப்பசுவின் முலைப்பால் போலக்கருணை மிகுதியினால் அவ்வன்பே தாமாகி, எப்பொழுதும் வெளிப்பட்டு நின்று, அங்கே அருள் செய்வர்.

சிவபெருமானுக்கு வாச்சியமந்திரமாகிய சிவசத்தியே உண்மை வடிவம்; அச்சிவசத்தி கரியினிடத்தே அக்கினிபோல வாசகமந்திரத்தினிடத்தே நின்று சாதகருக்குப்பயன் கொடுக்கும். ஆதலினாலே, சிவபெருமானுக்குச் சிவசத்தியினால் வாசகமந்திரத்தோடு சம்பந்தம் உண்டு. அச்சம்பந்தம்பற்றி வாசகமந்திரஞ் சிவபெருமானுக்கு உபசாரவடிவமாம்.

மந்திரநியாசமாவது, வாச்சியமந்திரங்களாகிய சிவசத்திபேதங்களை உள்ளத்திலே சிந்தித்து, அவைகளை யறிவிக்கும் வாசகமந்திரங்களை உச்சரித்துச் சிவலிங்கமுதலிய திருமேனியிலே நியசித்துச் சிவபெருமானுக்கு உபசாரவடிவத்தை அம்மந்திரங்களினாலே சிரமுதலாக அமைத்தலாம். நியசித்தல்—வைத்தல், பதித்தல்.

யா. ந. ஆறுமுக நாவலரவர்கள்.

(இன்னும் வரும்.)

கடிதம்.

சிவபத்தியும் அடியார் பத்தியும் சைவாபிமானமும் நிறைந்த ஸ்ரீமான் ஈரோட்டு, E. S. அர்த்தநாரி யாச்சாரியவர்கள் 1915ளு டிசம்பர்மீ 20வ பத்திரிகாசிரியருக்கு எழுதிய கடிதம் :—

ஐயா அவர்கட்கு வந்தனம்,

I. ஈசனருளையும் குருசுவாமிகளின் கடாட்சத்தையும் முன்னிட்டுத் துவக்கிய சைவம் என்னும் மகுட நாமம் புனைந்த பத்திரிகையொன்று அடியேன்பால் சென்ற ஏப்ரல்மீ வி. பி. யில் வரவிடுத்ததையும், அதன்பிறகு காலந்தவறாது அனுப்பிய பத்திரிகைகளையும் பெற்று, அதில் வெளியிட்டுள்ள விஷயங்களையெல்லாம் மனதிற்கொண்டு அதனாலடையக்கூடிய பெரும்பயன்களையும், அதில் தக்க பிரமாணங்களோடு விஷயங்கள் எழுதி வெளியிடப்படுவதையும் உணர்ந்து பரவசமானேன். இப்பத்திரிகையின் அருமை பெருமைகளை இதையாதரித்துவரும் பத்திமான்கள் மனமார அறிவார்கள். ஆதலால் அவைகளை விரித்தெழுத பத்திரிகை யிடந்தராதென்று அஞ்சிநிற்கின்றேன்.

II. அருமை வாய்ந்த இப்பத்திரிகையின் சந்தாவோ, "ஆண்டளவும் அணுபன்னிரண்டே" என்றால் "கைம்மாறு கருதா ஈசனருள்போலன்றோ"

III. சென்னை ராஜதானியில் தமிழ் நாட்டிலிருக்கும் தமிழர்கள் 170லக்ஷம். தமிழ்ப் பத்திரிகை 67. அவைகளை வாசிப்போர்74,436. 67பத்திரிகைகளில், சிவாகமமாதியான நூல்களையும், சமயாசாரியர் முதலியவர்களின் திவ்விய சரித்திரங்களையும், சித்தாந்த உண்மைகளையும் விளக்கி, அரியபெரிய விஷயங்களை உலகானுபவங்களோடு சுயநலங்கருதாது சிவநேசம்பூண்டு அமுதளிக்கும் பத்திரிகையும் அதனையாதரிப்போரும் மிகச் சுலபமேயாகும். அவைகளைக் குறிக்காமல் விசனத்துடன் விடுக்கலாயிற்று.

170லக்ஷம் தமிழருள், தமிழ்ப்பத்திரிகைகளை வாசிப்போர் 74,436பேர். இவர்களுள், 10000பேர் இப்பத்திரிகையின் சந்தாதாரர்களாகச் சேர்வார்களாயின் வருடம் ஒன்றுக்கு 7500ரூபா கிடைக்கும். இத்தொகையைக்கொண்டு இப்பத்திரிகையை மேனுமேலும் அபிவிருத்தி செய்யக்கூடும். இதைப் பேரறிவாளர்களியாவரும் சிந்தித்து இப்பத்திரிகையை யாதரித்து அபிவிருத்தி செய்விப்பரென்று முழுநம்பிக்கையுடன் ஈசனைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
அடியார்க்கடியேன்,
E. S. அர்த்தநாரி யாசாரி.

ஈரோடு,
20-12-15.